தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ ஆனியீ 7௳ (21-6-'22.) | ப. 9.

சஞ்சீவாஞ்சன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை	வலி	தேள்	கடி	பல்	நோவு
மார்		பாம்புக்		கால்	
முதுகு		பூச்சிக்		காது	
இடுப்பு		விஷக்		கை	

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்திர ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிடெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர். A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி
தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

தபால் கூலியுள்பட. சந்தா

ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0

அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0

'தமிழ் உலகு' காரியாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்

மைலாப்பூர், சென்னை.

விஷய அடக்கம்.

மோகனதாஸ் கராம் சண்ட் காந்தி	66
அர்த்த சாஸ்திரம் I	67
வெட்கம்	67
சித்திரா (ஸீன்கள் 4, 5, 6)	68
பெரிய மனது உடைய அரசன்	70

தமிழ் உலகு

துந்துபி௵ ஆனி௴ 7உ.

மோகனதாஸ் கராம்சண்ட் காந்தி.*

"இந்த 1919-ம் வருஷத்தில், நம்முடைய தேசத்தைப் பற்றிய பல விஷயங்கள் ஏறக்குறைய ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கும் பொழுது, 'காந்தி' என்னும் பெயரைக் கேட்டிராதவர்கள் இல்லையென்றே சொல்லலாம். மிகவும் படித்துப் பெரிய உத்தியோகங்களை வகித்து வந்த W. C. பானர்ஜி, மேதா, ட்யாப்ஜி, ரானடே, கோகலே முதலான இன்னும் மற்ற மேதாவிகளைப்பற்றி எல்லாஜனங்களும் அறிந்திருக்கக் கூடுமென்பது சந்தேகத்திற்கிடமாக இருக்கும். கவர்னர்களும் கவர்னர் ஜனரல்களும் பார்த்துத் திகைத்து, இவர்கள் இங்கிலாண்டில் மாத்திரம் பிறந்திருந்தார்களேயாகில், எவ்வளவு உயர்ந்த பதவிக்கு வந்திருப்பார்களென பிரமிக்கும்படி கியாதிபெற்ற நம்மிந்திய தேசாபிமானிகளை ஸகல ஜனங்களும் அறிவார்களா? நம் இந்தியாவில், காங்கிரஸ் மகா ஸபையை மிக்க ஊக்கத்துடன் ஸ்தாபித்தவர்களும், மேலும் அதில் தலைமையை வகித்து நம் பாரத தேசத்தைக் கரையேற்றுவதற்காக உழைத்தவர்களுமான அப்புருஷ ஸிம்ஹங்களை யாவரும் அறிந்திருப்பார்களா? தன் ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் மாத்திரம் செய்யப்பெறாத ஓர் அரசனைப்போல், அளவற்ற ஐசுவரியத்துடன் கூடிய பம்பாய் நகரத்தில், மிகப்பெருமையுடன் இருந்து வந்த ஸர் பெரோஸிஷா மேதாவின் வாக்கு வன்மையையும், சலுகையையும், தன் தேசத்தின் மீதிருந்த அலாதி விசுவாசத்தையும், எல்லா ஜனங்களும் அறிந்திருக்கக்கூடுமா? கர்ப்பத்திலிருந்தது முதல் இக் காங்கிரஸ் மகா சபையை ஸம்ரக்ஷித்தும், மேலும் தம் இளமைப்பருவத்தில் கவர்ன்மெண்டாரின் அதிருப்தியாகிய கொடும் ரோகத்திலிருந்து விடுவித்தவருமான W. C. பானர்ஜியின் தேசபக்தியையும், ஔதார்யத்தையும் படிப்பில்லாத நம் இந்தியர்கள் இதுவரையில் தெரிந்து கொண்டிருக்கக்கூடுமா? மகாராஷ்டிரத்தின் கண்ணாகிய பூனா நகரத்தில், வெகுகாலம் பண்டிதராக உழைத்தவரும், பிறகு அந்த ஊரில் நம் தேசத்தின் க்ஷேமத்திற்காக எப்பொழுதும் பாடு படவேண்டுமென்ற எண்ணத்தோடு, 'நம் தேசத் தொண்டர்கள்' என்ற பெயருடன் கீர்த்தி பெற்றதான ஓர் சங்கத்தை நாட்டினவருமான காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலேயின் மன உறுதியையும், நிகரற்ற பிரயாஸத்தையும், எவ்வளவாயிரம் ஜனங்கள் நம் தேசத்தில் நிச்சயமாக அறிந்திருப்பார்களா? இம் மஹான்களைப்பற்றி மரியாதைக் குறைவாக நாம் இங்கே பேச எண்ணங்கொள்ளவில்லை. ஆயினும் காந்தியைப்போல இவர்களையும், கேவலம் பாமரர்கள் அவ்வளவு செவ்வையாக அறிந்திருக்கிறார்களென்று நாம் நினைப்பது ஸாத்தியமல்ல.

"நம்மிந்தியாவில் கோடிக்கணக்காயுள்ள ஜனங்களின் மனதைக் கவர்வதென்றால், அது சுலபமான காரியமென்று எவன் நினைப்பான்? பல விரதங்களை யனுசரித்து, இடைவிடாமல் உபாஸனை செய்தாலன்றி, தெய்வமும் நமக்கு அனுக்கிரஹம் செய்வது என்பது எப்படி முடியாததோ அதைப்போலவே ஒரு தேசத்திலுள்ள ஜனங்களின் பிரீதியை ஸம்பாதிப்பதும் மிகவும் சிரமமாகயிருக்கும். ஜனங்களின் கஷ்ட நிஷ்டூரங்களை யறிந்து அவர்களின் சௌக்கியத்திற்காகப் பாடுபடும் பரோபகாரிகள் சிலர் முன்வருவார்களேயாகில், ஒவ்வொருதினத்தையும் வறுமையிலேயே கழிக்கின்ற, திரளான ஏழைகள் அப்பரோபகாரிகளைக் கொண்டாடுவது நமக்கெவ்வித ஆச்சரியத்தையும் தரவில்லை. தாயற்ற குழந்தைகளைப்போல் தம் குறைகளைக் கவனிக்கின்றவர்கள் ஒருவருமில்லாதிருக்கையில் தங்களுடைய தரித்திரத்தின் கொடுமையையும் அனுபவிக்கத் தயங்காதுகாந்தியைப் போலொத்த ஓர் நரோத்தமன் தன் ஆயுள் முழுமையையும் தங்கள் நிமித்தமே செலவழித்திருந்தால் அவனை அபூர்வமாக ஏன் ஜனங்கள் கொண்டாடமாட்டார்கள்? தங்களைப்போலவே, பறையர்களுக்கும் எளிதில் கிடைக்கின்ற துணியை உடுத்து, பொருளை லக்ஷியம் பண்ணாமல், தங்கள் ஏழைத்தனத்திலும் ஒரு பெரும்பாகத்தை ஸந்தோஷத்துடன் அனுபவிக்கின்ற மகாத்மாவான காந்தியை, எல்லா ஜனங்களும் தெய்வமாக மதிப்பது நிரம்பவும் சகஜமே. மேலும் அது நம்முடைய தேசத்திலுள்ள ஜனங்களின் ஓர் விசேஷமான குணத்தையும் காட்டுகின்றது. இந்த இடத்தில் முக்கியமாக ஒரு விஷயத்தைக் கூற நாம் விரும்புகிறோம். சென்ற 150 வருஷங்களாய் இப்பரதகண்டத்தில், விக்டோரியா மகாராணியாரைப்போல ஜனங்களை வசீகரம் செய்தவர்கள் ஒருவருமில்லை யென்றே சொல்லலாம். ராஜவிசுவாசம் என்ற வெள்ளத்தால் நிரம்பிய மனதுள்ளவர்கள் இந்தியர்களுக்கு ஸமானமாக எவரும் ஆகமாட்டார்கள். கேவலம் வழக்கத்தாலும் அப்பியாசத்தாலும் இங்கிலீஷார் ஓர் மன்னனிடத்தில் அபிமானம் வைத்து வருகிறார்களே தவிர வேறு இல்லை. அரசரில்லாவிடில் அகற்றப்பட்ட ஆபரணத்தால் அழகு குன்றுவதைப்போலவே யொழிய, வேறு எவ்விதமான அசௌகர்யமும் அவர்களுக்கு நேரிடமாட்டாது. தன்னைத்தானே ஆளும் திறமையும் பிறருக்கு அடிமைகளாக மாட்டோம் என்ற பிடிவாதமும் பொருந்திய ஆங்கிலேயர்கள், துஷ்டனாகிலும் பிரஜைகளிடம் அன்புள்ளவனாகிலும், அரச-

* மகாத்மா காந்தியைப்பற்றிய இவ்விஷயம் 1920-ம் வருஷத்தில் சுதேசமித்திரன் பத்திரிகையில்வெளியிடப்பட்டது. இப்போதும் அவர் சம்பந்தமாகத் தொடர்ச்சியாய் சில தத்வங்களை நாம் எடுத்துரைக்க எண்ணுவதால், அவ்வியாசம் மறுபடியும் இங்கு காணப்படுகின்றது—பத்திராதிபர்.

னென பயத்துடனும் மரியாதையுடனும் கீழ்ப்படியும் தன்மைவாய்ந்த இந்தியர்களுக்கு ஸரியாக ராஜபிரீதியுள்ளவர்களென்று நாம் எப்படி நம்பக்கூடும்? 'இவர்கள் ராஜபக்தியற்றவர்கள்' என, நம்மை, ஆங்கிலேயர்கள் பலர், ஸ்நேஹமின்மையால் தூஷித்து வந்தாலும், 'அரசனே தெய்வம், அரசனே கதி' என்ற மதத்தை இதுகாறும் தழுவி நிற்கும் இந்தியர்கள், இப்பொழுது ஒரு க்ஷணத்தில் திடீரென மாறிவிடுவார்களா? ஸ்வாதந்தர்யத்தில் மோகங்கொண்ட ஐரோப்பியர்கள் தம்மைத் தவிர்த்து, மற்ற ஒருவனுக்கும் தலைகுனிவது ஸாத்தியமாகாதது போல், நம்மிந்தியர்களும் எலும்பு, ரத்தம். மாம்ஸம் இவைகளைப்போல, தம்மங்கங்களின் ஓரங்கமாய் நிற்கும் ராஜவிசுவாசம் என்பதொன்று அன்னியில், ஜீவித்திருக்கக் கூடுமென்பது ஸாத்தியமில்லை. பார்லிமெண்டு இல்லாவிட்டால், தம் தேசத்திற்கே ஹானி வந்து விட்டதென்று எப்படி பிரிடிஷார் பயப்படுவார்களோ, அப்படியே இந்தியர்களும் 'அரசன்' என்ற ஒரு மனுஷ்யன் இல்லாவிடில், ஒழுங்கீனமும், கலகமும், அநீதியும், தேசத்தில் வந்துவிட்டதென்று நினைப்பார்கள்.

"இதுநிற்க, நாம் இவ்வபிப்பிராயத்தை ஓர் காரணத்திற்காகத் தான் இங்கே விவரித்துச்சொல்ல விரும்பினோம்! நம்முடைய தேசத்தில் எதற்குக்குறைவுஇருந்தாலும், அரசர்கள் விஷயமாக ஜனங்களின் ஹிருதயத்தில் எவ்விதவிசுவாசக் குறைவும் இருந்ததில்லை. மணற்பாங்குகளில் சொற்பப் பிரயாசத்துடன் எப்படி சவுக்கானது ஒரே காடாக வளருகின்றதோ, அப்படியே இந்தியர்களின் ஹிருதயத்திலும் ராஜவிசுவாசம் என்பது, நம் தேசத்தில் எவ்வளவு க்ஷாமம் இருந்தபோதும், தானாகவே வளரும். அதற்காகக்கிருஷி செய்து, எருவிட்டு, அதை மிக்க சிரமத்துடன் பயிரிடுவதற்கு ராஜாங்கக் குடியானவர்கள் தேவையில்லை. நல்ல கடுங்கோடையில் ஓலைக்குடிசைகள் பசியுடன் பற்றி யெரிவது போல் நம் தேசத்தில் ஜனங்கள் ஏழ்மையின் தாபத்தால் வருந்தும் பொழுதும் எந்த வெப்பத்தையும் தணிக்கக்கூடிய விசுவாசமென்னும் மழையைத் தங்கள் அரசர்களின் மீது வர்ஷிப்பார்கள். சுமார் நாற்பது ஆவணிகளுக்கு முன்னர், மிக்கபயங்கரமான பஞ்சத்தில், இந்தியர்கள் பழுத்துதிர்ந்து உலர்ந்து மடிக்கின்ற சிறகு போல் மரித்த பொழுது, அங்கங்கே கஞ்சித்தொட்டிகள் தோன்றினவுடன் முன்னிலும் பதின் மடங்கதிகமாக பக்தியுடனும், பிரியத்துடனும் மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியாரை நம்ஜனங்கள் பெற்றெடுத்த தாயைக் காட்டிலும் கொண்டாடவில்லையா? அகம்பாவமென்ற அபவாதத்துக் குட்பட வேண்டிவரினும் நம்மிந்தியர்களைப்போலப் பிறவியிலேயே ஸாதுக்களாயுள்ளவர்கள் வேறு எங்கும் இலர் என்பதை இங்கே வற்புறுத்த விரும்புகிறோம். ஜன்மராசியில் பிரவேசிக்கும் சனீசுவரனைப்போல் நம்முடைய துரதிர்ஷ்டமும் கால வித்தியாசத்தால், மிக்கக் குரூரத்துடன் இப்பொழுது படுத்துகின்றது. ஆனாலும் அசோக வனத்தில் ஒருதுஷ்டனால் தனியாக பிடிக்கப்பட்டு, பரிதபித்த அந்த பதிவிரதைபோல தெய்வத்தினிடம் குறைவற்றதோர் விசுவாசத்தோடு நமக்கும் சிரேஷ்டமான தசா புக்தி பலன்களுடன் ஒருவிடிவு காலம் வருமென்றே மனப்பூர்வமாக நாம் நம்பியிருக்கின்றோம்."

(தொடரும்)

அர்த்த சாஸ்திரம்.

1

அர்த்த சாஸ்திரம் என்பது எவ்விஷயங்களைப் பற்றி கூறுவது? இவ்விஷயங்கள் நமக்கு எவ்வாறு பயன் படுவது? என்ற வினாக்களுக்கு முதலில் விடையளித்து பிறகே இச்சாஸ்திரத்தினுடைய தத்துவங்களைப் பற்றி விவரிப்போம். இவ்வுலகத்தில் பிறந்து வாழும் மனிதர்கள் யாவரும் சுகமான வாழ்க்கையையே விரும்புகின்றனர். சுகமான வாழ்க்கைக்கு இன்றியமையாதவை யாவனவென்பதை ஜனங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் விதமாகக் கருதுகின்றனர். வேதாந்த விசாரம் செய்துகொண்டு இன்பங்களில் பற்றற்று துறவியாவதே சுகவாழ்க்கையெனக் கொள்ளும் மானிடர் இப்பூமியில் இந்நாட்களில் காணப்படுவது அரிது. உண்ண உணவும் அணிய துணியும் தங்க இடமும் எல்லோருக்கும் வேண்டியனவே. இவைகளைத் தவிர மனிதர்கள் விரும்பும் வேறு பொருள்களும் பல உள. பண்டைய காலத்தில் மானிடப்பிறவியினர் வெகு சிலரே யிருந்த காலத்தில் மனிதன் யாதொரு பிரயாசை யில்லாமல் தானாக வளர்ந்து பயிராகி வந்த தானியங்களையும், காய் கனி முதலியவைகளையும் வேட்டையாடி மிருக மாமிசங்களையும் உண்டு, மரவுரிகளையோ மிருகத் தோல்களையோ அணிந்து யதேச்சையுடன் உலகத்தில் திரிந்து வந்தான். பிறகு மனுஷ்ய வர்க்கத்தினர் அதிகரிக்க, அதற்கேற்றவாறு பொருளும் தானாக விருத்தியாகாது கண்டு தாங்கள் பல பொருளை தங்களுடையதாகக் கவரி அவைகளை விருத்தி செய்யத் தலைப்பட்டனர். நாளடைவில் ஜீவனமே பெரும் கவலையுடைத்தாகி அதற்கு உழைப்பதே மனிதனின் கடமையென முடிந்து உழைத்து தேடிய பொருளை பிறர் கவரா வண்ணம் காப்பதற்கு வேண்டிய ராஜாங்கம் என்ற ஒன்றை இயற்றி வந்திருக்கிறார்கள். இவ்விஷயங்களைப் பற்றி கவனிக்கையில் பல தத்துவங்கள் புலப்படுகின்றன. யாவரும் தங்கள் தங்கள் உழைப்பை அதிக ஈடு பெறும் துறைகளிலே செலவிட நோக்கங்கொள்ளுகிறார்கள். இவ்வழிகளையே இச்சாஸ்திரம் கூறுகின்றது. சுகவாழ்க்கைக்கு அமைந்த பொருள்களை தேடும் விதத்தையே இந்த சாஸ்திரம் கற்பிக்கின்றது. தனித்தனித் தொழிலைப் பற்றி யல்லாமல் எல்லாத்தொழிலுக்கும் பொதுவாய் பொருந்திய தத்துவங்களையே இங்கு காணலாம். சுயநலத் துடன் தன் முன்னேற்றத்தை நாடுகின்ற எவரும் இந்த தத்துவங்களை தெரிந்து கொள்ளுதல் தகும். ஜனங்கள் தங்கள் தங்களுடைய நன்மைகளை தேடுவதில் கருத்துள்ளவர்களாயிருப்பின் தேசத்தின் க்ஷேமம் மேன்மேலும் முன்னேறும். நம் இந்தியாவில் இத்தத்துவங்களை அறிந்து கொள்ளாது ஜனங்கள் தங்கள் அபிவிருத்தியைப் பற்றி கவனம் செலுத்துவதில்லை. இச்சாஸ்திரத்தை கலாசாலைகளில் முக்கியமான ஓர் படிப்பாக சேர்க்கப்பட்டு மில்லை. மற்ற தேசங்களில் இந்த சாஸ்திரத்தை முற்றும் கற்றறிந்து தேசக்ஷேமத்தில் அதிக முன்னேற்ற மடைவித்திருக்கிறார்கள். இச்சாஸ்திரக் கொள்கைகளும், நம் தேசத்தின் நிலையையும், அந்நிலையை சீர்திருத்த வேண்டிய வழிகளும் நம் நேயர்களுக்கு எளிதில் விளங்குமாறு இப்பத்திரிகையில் பல பகுதிகளில் எளிய நடையில் எழுதப்பட்டு வெளிவரும்.

வெட்கம்.

ஜன சமூகத்தின்கண் நாம் நடக்கும் மாதிரியை மாற்றுவதில் வெட்கமே முதன்மையாக நிற்கின்றது. நமது மனோபாவங்கள் எவற்றினும் இதுவே வன்மை மிகுந்ததென உறுதியாய்க் கூறலாம். கெட்ட காரியங்கள் நடைபெறுவதையும் அது நன்கு தடுக்கும் சக்தி வாய்ந்ததென்பதில் நாம் எவ்வளவும் ஐயம் கொள்ள வேண்டியதில்லை. பிற

ருடைய இகழ்ச்சிக் காளாவதைப் பற்றி யெண்ணும் பொழுதே மனிதர்கள் நடுக்கமுற்று, சுற்றிலுமிருப்பவர்கள் தங்கள் முகக்குறியினாலும் சிறிதும் அதிருப்தியைக் காட்ட, அதை நோக் கூடாத பெரிய துரதிர்ஷ்ட மெனப் பாவிப்பதை நாம் அநேகமுறை கண்டிருக்கிறோம். தம்முடனிருப்பவர்களை விட தங்கள் ஸ்திதி எவ்வளவு மேம்பட்டிருப்பினும் ஜனங்கள் பிறர் தம்மைப் பற்றிக் கூறும் அபவாதத்திற் கஞ்சிக் கீழ்ப்பட்ட வழிகளையும் அநுசரிக்கத் துணிவார்கள். ஏனெனில், இவ்வெட்கமானது மனிதர்களை பிசகுகளிழைப்பதனின்றும் தடுப்பது போலவே, நேர்வழியை அநுசரிக்க வொட்டாமலும் செய்கின்றது. மனத்தூய்மையின் விருத்திக்கு அது காரணமாயில்லாமலிருப்பதுடன், சில சமயங்களில் நன்மையைப்பயக்க்க் கூடியதையும் கெடுதியுற்றதாய்ச் செய்து விடும்.

நம் செயலன்றியில் நேர்ந்துள்ளவைகளை நாம் மான ஹீனமாய்க் கொண்டு வருந்துவது சகஜமே. இழிவான பிறப்பாவது, ஈசுவரன் அமைக்கும் அங்கங்களிலுள்ள குறைவாவது, மற்றும்,லோகத்தார் மதிப்பிற்குத் தாழ்வையுண்டாக்கும் கீழ்ஸ்திதியாவது ஒருவன் செயலுக்கு அடங்கி யுள்ளனவோ? ஆயினும், இவைகளினின்றும் தோன்றும் மானக் கேடானது நம் சந்தோஷத்தையே கெடுத்து ஜன்மம் முழுமையுமே நாம் வருத்தமுறக் காரணமாகிவிடும். இவ்வவமானம் நமது குணக்குறைவினா லுண்டானதல்ல. நம் சக்தியினாலும், நன்னடக்கையாலும், மற்ற காலஸ்திதி வர்த்தமானங்களாலும் நமக்கு முற்றிலும் கிடைக்கத்தக்கதேயென்று நாமெண்ணும் ஒரு கௌரவத்தை நாம் பெறாமற் போவது அதிர்ஷ்டத்தின் ஓர் குற்றமே என்பதான நம் எண்ணத் திலிருந்து தான் அது தோன்றுகிறது. நமக்குரியதான மதிப்பை நாம் அடைய முடியாமற் போவது பற்றி நமக்குள்ளேயே வெட்கமுறுகின்றோம். பிறர் நம்மை கௌரவிக்க வேண்டியது போக, நம்மிடம் அநுதாபங் கொள்ளுவது நம்மையே நொந்துகொள்ளும்படிச் செய்கின்றது.

எல்லோரும் ஒத்துக்கொள்ளக் கூடியதான காரிய மொன்றையும் ஒருவன் செய்ய நாணமுறக் கூடுமென்பதை நாம் அநுபவத்தில் காண்கின்றோம். சாதாரணமாய் அது அசாத்தியமாகத் தோன்றலாம். ஆயினும், உலகில் பலமுறை அவ்விதமே நடக்கின்ற தென்பதில் அணுவளவும் ஐயமில்லை. இவ்வெட்கமானது எப்பொழுதும் பிறருடைய அபிப்பிராயங்களைப் பற்றியுள்ள நமது பயத்திலிருந்தே தான் தோன்றுகின்றதோ வெனில்,—ஒருவன் தன்னைப்பற்றியே உண்மையில் நிச்சயத்துடனிருந்தால்—தான் செய்யும் ஒரு நற்கருமத்தைப் பற்றி நாணமுற்ற போதிலும், அதையொட்டியே தன் ஜீவியமுழுவது முள்ளதென்றறிந்தால், அப்பொழுது சிறிதும் பயமற்றவனாய், மற்றவர் தன்னைப்பற்றிக் கூறுவதை யொன்றும் சட்டை செய்யாமலே யிருப்பான். சில சமயங்களில், மனிதர்கள் பக்தி மார்க்கத்தை நாடும் தங்கள் உயர்ந்த நோக்கங்களை வெளியிட்டுச் சொல்லப் பின்னடைவது அவர்கள் அவைகளைப் பற்றி வெட்கமடைவதனா லென்று நாம் கருதலாகாது. பிறகு யாதெனில், தாங்கள் கூறியவற்றிற்குப் பின்பு தாங்கள் தகுதியற்றவர்களாய் விடுவோமோ வென்று அவர்கள் கொள்ளும் அச்சத்தினாலேயாம். இவ்விதமாக நாம் ஒத்துக்கொள்ளாதிருப்பினும், இவ்வெட்கம் என்பதான மனோபாவம் புரியும் செயல்கள் உலகில் அதிகமாகவே தென்படுகின்றன.

சித்திரா

ஸீன் 4

சித்திரா—என்னை எதற்காக அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்?

அர்ச்சுனன்—நீ எவ்விதம் அம்மாலையைத் தொடுக்கிறா யென்பதைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். இரட்டைக் குழந்தைகள் போன்ற சாதுர்யமும், அழகும் உன்னுடைய விரல்களில் உத்சாகமாய் விலாஸம் புரிகின்றன. அதை நோக்கும்பொழுது எனக்கோரெண்ணமுண்டாகின்றது.

சித்திரா—அவ்வெண்ண மென்ன?

அர்ச்சுனன்—ஒரு சிரமமுமில்லாமல், வெகு நேர்த்தியாய் இம்மாலையைத் தொடுப்பது போலவே, நாட்டை விட்டு வெளிப் பட்டிருக்கும் என்னுடைய நாட்களையும், நான் என்னிருப்பிடத்திற்குத் திரும்பும்பொழுது என் முடியை அலங்கரிப்பதன் பொருட்டு, என்றும் அழியாத வோர் மாலையாக நீ இசைத்துக் கொண்டிருக்கிறாயென்று எண்ணுகிறேன்.

சித்திரா—இருப்பிடமா? ஆனால் இக்காதல் ஒரு வாசஸ்தலத்திற்கும் ஏற்பட்ட தல்லவே.

அர்ச்சுனன்—அப்படியா?

சித்திரா—ஆம், அதைப்பற்றி ஒருபோதும் நீர் பேசலாகாது. உறுதியாய், என்றும் நிலை நிற்கக் கூடியவற்றை உமதிருப்பிடத்திற்குக் கொண்டு செல்லும். இச்சிறு காட்டு மலர் அது பிறந்த விடத்திலேயே யிருக்கட்டும். பகலின் இறுதியில் வாடிவதங்கும் புஷ்பங்களுடனும், உலரும் இலைகளுடனும், அதுவும் தன் மேன்மை குன்றாமல், இனிய மரணத்தையடையும்படி தாம் விட்டுவிட வேண்டும். வாடும் தன்மையுடையவைகளும், சடுதியில் மறக்கப்படக் கூடியவைகளுமான பொருட்களின் மீது சிறிதும் தயையற்றதான கற்றரையில் எறிந்து விட நீரதைத் தமது அரண்மனைக்கு எடுத்துச் செல்லலாகாது.

அர்ச்சுனன்—நம்முடைய அன்பு அவ்வாறானதா?

சித்திரா—ஆம், வேறுவிதமல்ல. இதைப்பற்றித் தாம் எதற்காக வருந்தவேண்டும்? வீண் பொழுது போக்கும் நாட்களில் ஏற்பட்டது அதற்கப்புறமும் இருக்கலாகாது. சந்தோஷமானது எந்தக்கதவின் வழியாய்த் திரும்பிச் செல்ல வேண்டுமோ, அக்கதவு மூடப்பட்டதாயின், துக்கமாக மாறிவிடும். அது அவ்விதம் மாறாமலிருக்கும் வரையும் தம்முடனிருத்தல் போதுமானது. ஆரம்பத்திலுண்டான தமது ஆசையானது அடையக் கூடியவைகளைவிட அதிகமாய், யாவும் கண்டு அநுபவித்துத் தெவிட்டடையும் உமது திருப்தி கேட்கவேண்டாம்.

சந்தியா காலம் நெருங்கிவிட்டது. இம்மாலையை யணிந்து கொள்ளும். சோர்வுற்றிருக்கும் என்னைத் தமது கரங்களிலேந்திக் கொள்ளும்படி வேண்டுகிறேன். நம்மிருவருடைய அதரங்களும் இனிமையாய் ஒன்று சேரும்பொழுது, நம் எல்லா வீண் மனக் குறைகளும் நசித்துப் போகட்டும்.

அர்ச்சுனன்—ஸ்! என் கண்ணே! கவனித்துக் கேள். தூரத்திலிருக்கும் ஆலயத்திலிருந்து தீபாராதனையைக் குறிக்கும் மணியோசை இந்நிச்சப்தமான சந்தியாவேளையில் எவ்விதம் கேட்கின்றது பார்.

ஸீன் 5

வசந்தன்— நண்பா! உன்னோடு சரியாய் என்னால் செல்லமுடியவில்லை. நான் மிகவும் களைப்படைந்து விட்டேன். நீ மூட்டிய தீயை அணையாமல் எரியவிடுவது எனக்கு நிரம்ப கஷ்டமாயிருக்கிறது. நித்திரையினால் மென் கையிலுள்ள விசிறி

நழுவி விழ, நெருப்பின்மேல் சாம்பலும் வந்து மூடிக்கொள்ளுகிறது. உடனே நான் விழித்துக் கொண்டு, என் முழுப்பலத்துடனும் மீண்டும் அவ்வணையும் நெருப்பை எரியச்செய்கிறேன்.

மன்மதன்.—ஒரு குழந்தையைப் போல் நீ சஞ்சல புத்தியுள்ளவனென்பது எனக்குத் தெரியும். ஸ்வர்கத்தில் போலவே, பூலோகத்திலும் உன் செயல்கள் ஒரு வழிப்படாமல் நிலையற்றிருக்கின்றன. நாட்கணக்காய் பல சித்திர வேலைகள் செய்து கட்டும் யாவையும், சிறிதும் வருத்த மில்லாமல் நீ ஒரு நிமிஷத்தில் நாச மாக்குகிறாய். ஆயினும், இந்நம்முடைய வேலை அநேகமாய் முடிந்து விட்டதெனக்கருதுகின்றேன். சந்தோஷகரமான தினங்கள் வெகுசீக்கிரம் பறந்து விடுகின்றன. அநேகமாய் இறுதியை யடைந்த இவ்வருஷமும் ஆநந்தம் மேலிட்டதாய்த் தன் நினைவற்று மயங்குகின்றது.

ஸீன் 6.

அர்ச்சுனன்—நான் காலையில் துயிலொழித்ததும், இரவிலுண்டான என்கனவுகள் ஒரு ரத்தினத்தைப் பெயர்த்தெடுத்தன வென்று கண்டேன். அதைப் பத்திரமாய் வைத்துப் பூட்ட ஒரு பெட்டியாவது, அல்லது, அதை வைத்திழைக்க ஒரு கிரீடமாவது அல்லது, அதைக் கோர்த்துத் தொங்கவிட ஒரு பொற்சங்கிலியாவது என்னிடமில்லை. ஆயினும் அதை எறிந்துவிடவும் என்மனம் இடம் கொடேனென்கிறது. வேறு செய்கையின்றி இதை ஏந்திக்கொண்டிருக்கும் வேலையை மட்டுமுடைய எனது க்ஷத்திரியப் பெருமைபூண்ட வலது கரமும் தனக்குரிய கடமைகளை எளிதில் மறந்து போகின்றது.

சித்திரா வருகிறாள்.

சித்திரா—தமது மனதில் இப்பொழுது தோன்றுவதென்ன?

அர்ச்சுனன்—என்னுள்ளத்திலின்று வேட்டையைப் பற்றிய எண்ணங்களுண்டாயிருக்கின்றன. மழை எப்படிக் கல்வருஷமாய்ப் பொழிகின்றது பார். ஆகாயத்தில் கரிய மேகங்கள் தோன்றி இடைவெளியில்லாமல் சூழ்ந்திருக்கின்றன. இகழ்ச்சியுடன் நகைத்து வரம்புமீறி நடக்கும் ஒரு யௌவன பருவம் வாய்ந்த சிறுவன்போல், கரைபுரண்டோடும் இந்நதியும் தங்கு தடையின்றிச் செல்லுகின்றது. இம்மாதிரி மழை நாட்களில் தான் நாங்கள்—ஐந்து சகோதரர்களும் கொடிய விலங்குகளை வேட்டையாட "சைத்திரக" வனத்திற்குச் செல்லுவது வழக்கம். அப்பொழுதெல்லாம் சந்தோஷகரமான நாட்களாயிருந்தன. முரசவாத்தியம்போல் ஆழ்ந்து சப்திக்கும் மேகத்துவனிக்குச் சரியாய் எங்கள் ஹிருதயங்களும் மட்டில்லா மகிழ்ச்சியுடன் குதித்தெழும்பும். மயில்களிடும் கூச்சல்களினெதிரொலி காடு முழுவதும் கேட்கும். மழை இடைவிடாது பொழிவதாலும் மலை யருவிகளினோசையாலும், எங்கள் காலடிச்சத்தம் பயந்தோடும் மான்களின் காதுகளிற் படாது. ஈரம் கசிந்த மணற்றரை மீது சிறுத்தைகள், அவைகள் வசிக்கும் குகையை நாங்கள் கண்டு பிடிக்கும்வண்ணம், தங்கள் அடிச்சுவடுகளை விட்டுச் செல்லும். வேட்டை முடிந்ததும், நாங்கள் ஒவ்வொருவரும் தைரியமாய், கரைபுரண்டோடும் நிலையில்லா அலைபாயும் நீரையுடைய நதிகளில் நீந்திச் செல்வது வழக்கம். அப்போதிருந்த ஒரு வழிப்படாமற் சலிக்கும் சுபாவம் எனக்கிப்பொழுதுண்டாயிருக்கின்றது. வேட்டையாட இச்சமயம் விருப்பம் கொள்ளுகிறேன்.

சித்திரா—முதலில், இப்பொழுது தாம் பிடிக்க முயன்றிருப்பதை எவ்வகையிலும் தொடர்ந்து சென்று, முடிவில் உமது கைகளில் சிக்கும்படிச் செய்துவிடும். அம்மாயா மானை அவசியம் பிடித்தாக வேண்டுமென்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகமில்லையா? ஆயினும், அவ்வித உறுதி இன்னும் தமக்குண்டாயிருக்காதென்றே எண்ணுகின்றேன். ஒரு கனவு போல், அவ்விநோத சுபாவத்தையுடைய மிருகம் உம்மிடம் வெகு சமீபம் நெருங்குவதுபோல் தோன்றி, மறு நிமிஷமே உம்மைவிட்டு விலகிச்சென்று விடுகின்றது. ஒரு ஆயிரம் அம்புகளை எறிவதுபோல், எவ்விதம் அம்மெய்மறந்த மழை அக்காற்றைத் துரத்துகின்றது பாரும். ஆயினும், அக்காற்று அம்மழைக்கு வசியமாகாமலே தன்னிச்சைப்படி சஞ்சரிக்கிறது. நம் விளையாட்டையும் இதற்குச் சமானமாய்க் கூறலாம். அதி விரைவான நடையையுடைய சௌந்தரிய தேவதையைப் பிடிக்கத்தாம் தமது கையிலிருக்கும் ஒவ்வொரு அம்பையும் குறிபார்த்து எய்கின்றீர். ஆயினும், அம்மாயாவியானவள் ஒருவராலும் ஸ்பரிசிக்கப் படாதவளாய்த் தன்னிச்சையுடன் எப்பொழுதும் சென்று கொண்டிருக்கிறாள்.

அர்ச்சுனன்—கண்ணே! உன் வருகையை எதிர்பார்த்து நிற்கும் அன்புள்ள ஜனங்களையுடைய வீடு என்பதொன்றும் உனக்குக்கிடையாதா? ஒரு காலத்தில் உன்னுடைய இனிய பணிவிடைகளால் களிப்புடன் விளங்கிப் பிறகு நீ இவ்வனத்தையடைந்ததும், ஒளிகுறைந்து அந்தகாரத்திலமிழ்ந்திய விடம் நிச்சயமாய் ஒன்றுண்டென நினைக்கின்றேன்.

சித்திரா—ஏனிந்தக் கேள்விகள்? மெய் மறந்து அனுபவித்த இன்பகாலம் ஒய்ந்து விட்டதோ? தம்முன் நான் இப்பொழுது தோன்றுவதல்லாமல் வேறு விதமானவளல்லவென்பதை நீர் தெரிந்து கொள்ளவில்லையா? இவ்விடத்தை விட்டு வேறு பிரதேசத்தை யானறியேன். ஒரு கிம்சுக புஷ்பத்தினிதழ் நுனியிலிருக்கும் பனித்துளிக்குப் பெயரும், இருப்பிடமும் இருப்பதுண்டோ? ஒரு கேள்விக்கும் அது பதிற் சொல்லுவதில்லை. தாம் காதலிக்குமவளும் அவ்வழகிய பனித்துளி போன்றவளே.

அர்ச்சுனன்—இவ்வுலகத்தில் அவளுக்கொரு பந்தமுமில்லாம லிருப்பது மிகுந்த ஆச்சரியம். விநோதப் பைத்தியமுள்ள ஒரு தேவதையின் அஜாக்கிரதையினால் பூமியின்மீது தவறி விழுந்த ஸ்வர்கத்தின் ஒரு துண்டாக மட்டும் அவளிருக்கக் கூடுமா?

சித்திரா—ஆம், அவ்வாறானவளே அவள்.

அர்ச்சுனன்—ஆகையால் தான், உன்னை எப்பொழுதும் இழந்து விடுவது போலவே, எனக்குத் தோன்றுகிறது. என்னுள்ளம் திருப்தியடையாமலும், என்மனம் அமைதியற்று மிருக்கின்றன. என்கைக் கிட்டாத செல்வமே! இன்னும் சற்று என்சமீபம் அணுகுவாய். பெயர், வீடு, குடும்பம் முதலிய பந்தங்களுக்கு உன்னை வசியமாக்கிக் கொள். இவ்வெல்லா பாசங்களிலும் உன்னை என் ஹிருதயம் உணர்ந்து களிக்க, மெய்யன்பென்னும் உயர்ந்த காவலுடன் அமைதியாய் உன்னுடன் நான் நாட்களைக் கழிக்கலாகாதா?

சித்திரா—மேகங்களுடைய வர்ண மாறுதலையும் அலைகளின் நடனத்தையும், மலர் களுடைய வாசனையையும் பிடித்து வைத்துக் கொள்ள ஏனிந்த வீண்முயற்சி?

அர்ச்சுனன்—கண்மணியே! அர்த்தமில்லாத வார்த்தைகளைக் கூறிக் காதலைச் சாந்தப் படுத்த எண்ணாதே. நான் பற்றிக்கொள்ளும்படியாய், இன்பத்தைப் பார்க்கிலும் இன்னும் சிறிது அதிக காலம் தாங்கக் கூடியதாய், கஷ்டத்திலும் உறுதியுள்ளதாயிருக்கும் ஏதாவதொன்றை எனக்களி.

சித்திரா—எனது வீரசிம்மமே! இவ்வருஷம் இன்னும் இறுதியையடைந்த பாடில்லை. அதற்குள் தாம் சலிப்படைந்து விட்டீர். புஷ்பத்தினுடைய ஆயுட் காலம் அவ்வளவு குறுகியதாயிருப்பது ஒரு பாக்கியமென்பதை இப்பொழுது தான் அறிந்தேன். இந்த என்னுடைய தேகமும், சென்ற வசந்த காலத்தில் மலர்ந்த புஷ்பங்களுடன் வாடி நசித்திருக்குமாயின், எவ்வளவோ பெருமை அதற்குண்டாயிருக்குமல்லவா? ஆயினும், அதனுடைய நாட்களும் கணக்கிலடங்கியதாகவே தானிருக்கின்றன. நீர் யோசிக்க வேண்டாம். வசந்தருதுவின் புஷ்பங்கள் வாடி பூமியின் மீது விழுந்த பிறகு வரும் மது தாக முற்ற வண்டு போல், ஆவலடங்காது மீண்டும் உமது அரிய ஹிருதயம் வாடி வாராவண்ணம் அதனுடைய தேன் யாவையும் முற்றிலும் பிழிந்தெடுத்து விடும்.

பெரிய மனது உடைய அரசன்.

ஹா! எவ்வளவு எண்ணிறந்த அரசர்களும் மந்திரிகளும் சேனாதிபதிகளும், பிரபுக்களும் இப்பதினெட்டு நாள் யுத்தத்திற்கு இரையானார்கள் என்று நினைக்க எங்கள் மனம் அனலிலிட்ட மெழுகுபோல் உருகுகின்றதே. எவ்வளவு உயர்ந்த ஜாதிக் குதிரைகளும், ஐராவதம்போன்ற யானைகளும் இக்கடும் போரில் மடிந்தன என்று தர்மபுத்திராதிகளான பாண்டு புத்திரர்கள் மிகவும் பரிதபித்தனர். இவர்களைப்போல் தாமும் மடிந்திருக்கலாகாதோவென்று வருந்தினர். இவைகள் அனைத்தையும் பார்த்தும் உயிர் தரிக்கின்றோமேயென்று நொந்தனர். இத்தருணத்தில் இவர்களின் பெரியோரான தர்மபுத்திரர் தனது தம்பிகளைப்பார்த்து, சகோதரர்களே, நாம் என்ன புத்தியற்ற பிழையை இயற்றிவிட்டோம். இரத்தத்தால் அலம்பப்பட்ட இப்பூமண்டலமானது நமக்கு இருந்தென்ன. நமது மாமன் மைத்துனர்களும், மாதாபிதாக்களும், பந்து மித்திரர்களும் ஆசார்யர்களும் இன்னும் மற்றுமுள்ள ஜீவஜந்துக்களும் இக்கடும்போரில் நமக்காக மடிந்த பின்னர் நாம் உயிர் வைத்தலும் நீதியாகுமோ? அவர்கள் சென்றவிடமே நாமும் போய்ச் சேருவோம். யாருமற்ற இந்த ராஜ்யத்தை முடி அணிந்து சிம்மாதனம் ஏறி அரசாள என் மனம் ஒப்பவில்லை. என்ன சொல்லுகிறீர்கள், என்று புலம்ப, பீமார்ஜுனாதிகள் அவர் சொல்லியதை அங்கீகரித்தவர்களாய் தர்மபத்தினியான திரௌபதியுடன் வேறு உலகம் செல்லப் பிரயாணமானார்கள்.

தங்கள் சிம்மாதனத்தில் வேறொரு அரசனை அபிஷேகம் செய்து தங்கள் கை சலிக்குமட்டும் தமக்கு சொந்தமான செல்வங்களை பிராமணர்களுக்கு வாரிக்கொடுத்து ஆடை ஆபரணங்களைக் களைந்து ஓர் பரதேசியின் உடை தரித்து நாட்டைவிட்டு பிரயாணமானார்கள். இவர்களை ஓர் நாயும் துணையாய் நின்றது. பன்முறைத் தடுத்தும் நகரவாசிகள் கண்ணீர் ஆறுப்பெருக, பாண்டு புத்திரர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள். கதிரவன் செங்கிரணங்கள் மறைந்து, இருளானது தன் வலையை எட்டு திக்குகளிலும் வீச வாரம்பித்ததும் ஒவ்வொருவராய் இனியும் இவர்களைப் பின்பற்றிச் செல்வது அசாத்தியமென்று உணர்ந்தவர்களாய் விசனத்துடன் வீட்டை நோக்கி நடக்கலானார்கள்.

தர்மபுத்திராதிகளோ அநேக காடு மலைகளையும் நதிகளையும் சமுத்திரங்களையும், மணற் குன்றுகளையும் பாலைவனங்களையும் சிறிதும் சலியா மனதுடன் கடந்து சென்றார்கள். இவர்கள் எதிரில் நெட்டையான பெரிய உருவம் ஒன்று சிவந்த மேனியுடன் தோன்றி வழியை மறித்துப் பின்வருமாறு கூறலாயிற்று.

பாண்டு புத்திரர்களே, நான்தான் அக்னிதேவதை. உங்களுக்கு நல்வரவாகட்டும். காண்டவனத்தை அளித்து என் மனதை திருப்தி செய்வித்த அர்ஜுனா! இப் பூமண்டல முழுதும் தனக்கு அடிமையாக்கியும், வற்றாத பாணங்களையும் தொடுக்கும் இவ்வற்புத வில்லை அதன் சொந்த விடத்திற்கே சென்று இளைப்பாறும் பொருட்டு உன்னெதிரிலிருக்கும் இவ்வகண்டமான சமுத்திரத்தில் எறிந்துவிடு. நீ பூண்டிருக்கும் கோலத்திற்கு இது ஏற்றதல்ல என்று கூறியதும், அர்ஜுனனும் அதன் கட்டளைப் பிரகாரமே சிறிதும் கலங்காத மனதுடன் தன்னைவிட்டு இதுகாறும் நித்திரையிலும் விழிப்பிலும் ஆபத்திலும் சம்பத்திலும் பிரியாததும், தான் உற்ற நண்பனாகவும் கொண்ட காண்டீவத்தை கடலில் எறிந்து விட்டான். அக்கினி பகவானும் அவ்விடம் விட்டு மறைந்துபோயினர்.

அரசகுமாரர்களும் தங்கள் வழியை நோக்கி நடக்கலானார்கள். பனிப்போர்வை போர்த்து ஆகாயத்தை ஊடுருவி நிற்கும் இமைய மலையையும், சூரியன் கிரணங்களால் தன் சரீரமுழுதும் பொன்மயமாய் அலங்கரிக்கப்பட்ட மேருவையும் கடந்தார்கள். பரமசிவனைப் பாதாளலோகத்தில் அழுத்தி விடவேண்டுமென்று கர்வம்கொண்ட பகீரதன் வேண்டி அழைத்த கங்கையையும் தாண்டினார்கள்.

இவ்விதம் இவர்கள் சிறிது தூரம் சென்றதும் சத்யபாமைக்கு தன் கணவனை வசீகரிக்கும் மருந்தை உபதேசித்தவளும், பாண்டவர்களடைந்த எண்ணிறந்த துன்பங்களில் உற்ற துணையாய் நின்றவளும், ஓர் தாயைப்போல் அவர்கள் வனவாஸத்தை களிப்பிக்கச் செய்தவளும் கிருஷ்ண பகவானுடைய அதிப்ரேமையைப் பெற்றவளுமான திரௌபதி முதலில் கீழே வீழ்ந்து உயிர்துறந்தாள்.

என்ன குற்றத்திற்காக பதியே தெய்வமாய் கொண்ட திரௌபதி நம்மை விட்டு விலகி மரித்தாள் என்று பீமன் மிகவும் பரிதபிக்க, தர்ம புத்ரர் அவள் கர்ணனும் குந்தியின் புத்ரன் என்று தெரிந்தவுடன், முன்பே இது வெளியாய் இருந்தால் அம்மகாபுருஷனும் தனது பதியாவானே என்ற எண்ணங்கொண்டதினாலென்று பதில் உரைத்தார். இன்னும் சிறிது தூரம் சென்றதும் இவர்களில் கடையவனான சகாதேவன் திரௌபதியின் கதியே பின்பற்றியவனானான். எவ்வளவோ நற்குணங்கள் வாய்ந்தவனாயினும் நாம் என்ற அகம்பாவமே மேலிட்டவனாய் இருந்ததால் அவன் இக்கதியை அடையலாயிற்று என்று தர்மபுத்ரர் தன் சகோதரர்களிடம் கூறினார். சில நிமிஷங்கள் சென்றதும் நகுலனும் கீழே வீழ்ந்து உடல் நீத்தான். இதைப்பார்த்து தர்மபுத்ரரும் விசனித்தவராய் நாமே இம்மூவுலகிலும் அழகிற் சிறந்தவன் என்ற எண்ணத்தின் பலனே இது என்று மனம் நொந்தார். மீண்டும் தங்கள் வழியே நோக்கிச் செல்லும் பாண்டுபுத்ரர்களில் அர்ஜுனன் முன் அடைந்தவர்களின் கதியே அடைந்தவனாய் விண்ணுலகு ஏகினன். உலகத்தின்கண் ஓர் ஒப்பற்றவில்லாளியான இவன் ஒரே நாளில் இப்பூமண்டல முழுவதும் தன் வில்லுக்கு இரையாக்க வல்லன் என்றும் அப்படியே தான் செய்வதாயும் சொன்ன சொல்லைத் தாங்கி 18 நாள் யுத்தம் செய்ய நேரிட்ட குற்றத்திற்காக இவன் இக்கதியை அடையலாயிற்று என்று மிகுதியாய் இருந்த பீமனிடம் உரைத்தார். இன்னும் சிறிது தூரம் சென்றதும் தர்மபுத்ரர் ஏதோ சப்தம் கேட்டு திடுக்கிட்டு நோக்க பீமனையும் இழந்துவிட்டோம் என்று உணர்ந்தனர்.

என்னருமை சகோதரனே, நீயும் என்னை விட்டு அகன்றனையே! உங்கள் நால்வரையும் இழந்து இந்த நாயைமட்டும் துணையாகக் கொண்டோ நான் ஸ்வர்க்லோகம் செல்லவேண்டும். போஜனத்தில் உனக்கிருந்த அளவில்லா அவாவைக்காட்டிலும் வேறொருதப்பிதமும் நான் கண்டதில்லையே. இதுவும் தப்பிதமென்றும் தெய்வங்களால் என்னுடன் வராமல் தண்டிக்கப் பட்டனைபோலும் என்று அங்கலாய்த்தார். இவ்வுடல் நிலையற்றது என்று நன்குணர்ந்த தர்மபுத்திரர் தன் மனதை சமாதானம் செய்து கொண்டு நாயுடன் கைலாசமலையின் தாழ்வாரத்தை அடைந்ததும், கண்ணை பறிக்கும் நான்கு வெள்ளை புறவிகள் பூட்டிய ஸ்வர்ணமயமான ரதத்தையும் அதில் வீற்றிருக்கும் தேவர்களின் மன்னனை இந்திரனையும் கண்டார்.

உலகிற் சிறந்த ராஜனே, வருவாய். எங்கும் நிறைந்த பரி பூரணநந்த பேரின்பத்தை வாறி உண்டு மீண்டும் பிறவாத இடத்தை இவ்விரதத்தில் ஏறி செல்வாய் என்று இந்திரன் தர்மபுத்திரரை பார்த்து கூற, தேவர்கள் மன்னனே! தாம் கூறும் அவ்வளவு உயர்ந்த விடத்திற்கு எனது காதலி திரௌபதியையும் எனது வார்த்தையை சிறிதும் மீறா எனது அருமை சகோதரர்களையும் விட்டுச் செல்ல என் மனம் இடம் கொடுக்க வில்லை. காட்டிலும்நாட்டிலும் நாங்கள் ஒருவரை ஒருவர் பிரியாமல்பற்றி இருந்தவர்கள். ஆகையால் என்னை மன்னிக்கவேண்டும். தாம் அழைத்துச்செல்லும் இடம் எனக்கு வேண்டியதில்லை, என்று வெறுப்பாய் விடையளித்தார்.

உத்தமனே, உனது இஷ்டமே பூர்த்தியாகட்டும், இந்த ரதத்தில் ஏறுவாயாக என்று இந்திரன் அன்புடன் கூற, 'முடியாது' என்றார் தர்மபுத்ரர். 'மீண்டும் என்னுடன் இவ்வளவு மலைகளையும் ஆறுகளையும் கடந்துவந்த இந்த நாயை விட்டு செல்ல என்றால் முடியாது' என்றார் உறுதியாகவே.

"அரசனே அப்படி அல்ல. நீ தேவதைகளில் ஒருவனாய் வசிக்குமிடத்தில் இவ்வற்பநாயை கொண்டுபோதல் தகுமோ"

"நான் திருமூர்த்திகளை தரிசிக்கபோவதானாலும் என்னை தஞ்சம் என்றடைந்த இந்த ஜந்துவைவிட்டு செல்ல முடியாது" என்று தர்மபுத்ரர் பிடிவாதம் சொல்ல, இந்திரனும் சிறிது பரிஹாஸமான குரலில் "இவ்வற்ப நாய்க்காக நீ என்றும் அழியாத சந்தோஷத்தை அடைய மனம் கொள்ளவில்லையா? உன் பிரிய சகோதரர்களைக் காண இச்சிக்கவில்லையோ" என்றான்.

"எவ்வளவு அற்ப ஜந்துவாயினும் தன்னை தஞ்சமென்று அடைந்தோரை கைவிடக்கூடாதென்று சாஸ்திரங்கள் கூறுகிறபடியால் என்காலின் கீழ் கிடக்கும் கதியற்ற இந்த நாயைவிட்டு எந்த பதவியும் எனக்கு பெரிதல்ல என்று தர்மபுத்ரர் கூறினதும், அந்த நாயானது தன் உருமாறி தர்மதேவதையாய் தன்னெதிரில் நிற்கக்கண்டு மிகவும் வியப்புற்றார்.

"எனதருமை மைந்தனே! நீயே எனக்கு புதல்வனாய் இருக்கத்தக்கவன். உன் மனதை இந்த நாயின் உருக்கொண்டு நீ என்னுலகம் வர அருகன்தானோ வென்று சோதித்தேன். தேவர்களையும் வெட்கச்செய்யும் உன் நற்குணம் கண்டு மிகவும் ஆநந்தம் கொண்டேன். நீயே சிம்மாதனத்தில் என்னுடன் வீற்றிருக்கத்தக்கவன் என்று உள்ளம் பூரித்தவராய் புத்ரனை தழுவிக்கொண்டார். பிறகு தர்மபுத்ரர் நாற்புறமும் நோக்கி எங்கும் தன் தம்பிமார்களையும் திரௌபதியையும் காணாதவராய் கலக்கமுற்று இந்திரனை வினவ, இந்திரனும் பாண்டுபுத்திரனே! வீண்கலக்கமேன். இவ்விடமேமனோகரமான அப்ஸரஸ்திரீகளின் ஸங்கீதத்தைகேட்டும் கண்ணைக் கவரும் காக்ஷிகளை கண்ணுற்றும் இம்மாளிகையில் சுகமாய் இருப்பாயாக என்று உரைத்ததும் தர்மபுத்திரர் கொஞ்சமேனும் அவர்களை விட்டு இச்சுகங்களை அனுபவிக்க இசையாமற் போகவே, இந்திரனும் அவர்கள் இருக்குமிடம் இவரையும் அழைத்துச்செல்ல ஓர் தூதனைவிடுவித்தான்.

இருண்ட ஒற்றை அடிபாதைகளையும், நீண்டு பெருத்த காடுகளையும், துர்கந்தம் நாற்புறமும் வீச பயங்கரமான மிருகங்கள் நாற்புறமும் கதற, மலை பொந்துகளையும், காலகோடி விஷத்தை கக்கும் பாம்புகளையும் கடந்து ஓர் அடர்ந்த காட்டின் நடுவில் பயங்கரமான இருண்ட குகையை அடைந்து உட்சென்றதும் துர்நாற்றம் சகிக்க முடியாதவராய் தர்ம புத்ரர் திரும்ப முயல, அரசனே போகவேண்டாம்; தங்கள் நல்வரவால் இவ்வடர்ந்த குகையின் நாற்றம் குறைவுபட்டு சுகந்தமான காற்றும் வீசுகின்றது. தங்கள் வரவால் நாங்கள் மீண்டும் சந்தோஷத்தை அடைவோம் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டாய் இருக்கின்றது என்று ஓர் குரல் கூறலாயிற்று. என்னை நோக்கி கூறுவது யார் என்று, தர்ம புத்ரர் ஆச்சரியத்துடன் வினவ, தம்முடைய ஆசை நாயகியான திரௌபதியே என்றும் நான்தான் தம்முடைய பிரிய சகோதரனான அர்ஜுனன், பீமன், சகாதேவன்; நகுலனென்றும் நாற்புறமும் சப்தம் உண்டாயிற்று. உடனே தர்ம புத்ரரும் துயரத்தில் ஆழ்ந்தவராய் தன்னுடன் வழி காட்டிவந்த தூதனைபார்த்து, தூதனே உன் எஜமானர்களிடம் நான் இவ்விடமே எனது வாழ் நாட்களை எனது தம்பிகளுடன் கழிக்கப்போவதாய் கூறு. அவர்களின் ஸ்வர்ணமாளிகையையும் சிங்காதனத்தையும் இம்மலை குகையைவிட நான் விரும்ப வில்லை என்று சொல். தேவாமிர்தம் போன்ற இனிய சங்கீதத்தைவிட இக்காட்டிலுள்ள மிருகங்களின் பேரிரைச்சலே எனது செவிகளுக்கு இன்பத்தை அளிக்கின்றன என்றார். தூதனும் அதிவேகமாய் தர்ம தேவதையின் மாளிகையை அடைந்து, தான கண்டது யாவற்றையும் கூற, அவர்களும் தங்கள் சிம்மாஸனத்திலிருந்து குதித்தெழும்பி தர்ம புத்ரர் இருக்குமிடம் விரைந்து ஒடி வந்தனர்.

எங்கும் புஷ்பங்களின் நறுமணம் வீசலாயிற்று. குளிர்ந்த காற்றும் மெள்ள வரத்தொடங்கியது. பறவைகளும் தங்கள் இனிய குரலினால் அவர்களின் வரவை போற்றி அழைத்தன. அவ்விடம் ஓர் கைலாசம் போல் மாறி நின்ற காக்ஷியை என்னென்று உரைப்பது.

தர்மபுத்திரனே உன்னுடைய மிருதுவான ஹிருதயத்தை காட்டிலும் நாங்கள் படுக்கும் படுக்கையும் மிருதுவல்ல. உனது ஹிருதயத்தின் நறுமணத்தைக் காட்டிலும் இப்புஷ்பங்களின் மணமும் சிறந்ததல்ல. நீயே இம்மூவுலகிலும் சிறந்த மகாபுருஷன். உன்விருப்பப்படியே உன் சகோதரர்களுடனும், திரௌபதியுடனும் நாங்கள் இருக்குமிடம் வருவாய். சகல பாபங்களையும் போக்கும் இக்கங்கா நதியில் யாவரும் ஸ்நாநம் செய்து நாங்கள் கொண்டு வந்திருக்கும் ஆடை ஆபரணங்கள் பூண்டு, தேவர்களுக்கு ஒப்பாய் சுகமாய்வாழ்வீர்களாக என்று ஆசீர்வதித்து, இந்திரனும் தர்மதேவதையும் கூறியதும், யாவரும், எங்கும் சாந்தமே உருக்கொண்டிருக்கும் ஸ்வர்கலோகத்திற்கு இந்திரன்பின் தொடர சுகமாய் யாவற்றையும் கடந்து சென்றனர்.

சகோதர்காள், அப்படியே யாவற்றையும் கடந்து செல்வோம். நாம் ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு சகோதரர்களாய் வாழுங்காலம் எக்காலமோ. பொறாமையும், பகைமையும் தீர ஒழித்து பெரியோரிடம் வணக்கமும் சிறியோரிடம் அன்பும் பூண்டு

ஒழுகுங்காலம் எக்காலமோ! செல்வவந்தர்களை கண்டு களிப்பும் ஏழைகளைக்கண்டு வெறுப்பும் கொள்ளும் காலம் சீக்கிரம் அழிந்துபோகும். மகாத்மா காந்தியின் உபதேசம் பெற்ற எவன் தான் தன்மாளிகை பலகணியிலிருந்து பாதையிற் செல்லும் ஏழைப்பரதேசியைக்கண்டு பரிகாஸத்துடன் நகைக்க துணிவான். யாவரையும் தன் உடன் பிறந்தோரைப்போல் நடத்தும் நாளும் வெகு விரைவாய் நம்மை அடைய வந்துகொண்டிருக்கிறது. நாம் என்னும் அகங்காரத்தை அறவே ஒழித்தல் வேண்டுமென்று நமது சாஸ்திரங்கள் முறையிட்டும் நம்முடைய தேசம் சம்பந்தப்பட்டவரையில் நமது தேசம் என்றும் அகம்பாவத்தையே பெரும்பாலும் மேற் கொண்டவர்களாய் தற்காலம் உலகத்தின் கண் உலவிவர வேண்டியது மிக்க அவச்யமாய் இருக்கின்றது. மகாத்மா காந்தியே நாம் முன்னறியும்தெய்வமாய்க்கொண்டு, அவர் செய்த உபன்யாசங்களே பிரமாணமானவேதங்களாய் மேற்கொண்டு நாம் இப்பொழுது தொடங்கி யிருக்கும் ஸ்வராஜ்ய மென்னும் யாகத்தை பூர்த்தி செய்யகடமைப் பட்டவர்களாய் இருக்கின்றோம். அமேரிக்கா ஆஸ்ட்ரேலியா முதலிய தேசங்கள் நம்மிடம் அனுதாபங் கொள்ளும் என்பது நிச்சியமானதே. தற்காலம் நமக்கு இந்த நாள் வெகுதூரத்தில் தோன்றுகிறது. ஆனால் ஆண் பெண்இருபாலரும் ஒன்றுகூட மனவமைதியுடன் நமதுநாட்டிற்காக உழைப்பார்களாயின் அந்த நாள் சீக்கிரமே உதயமாகி நமது நாட்டில் இருக்கும் இருளைசிதர செய்துவிடும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. நாம் நமது தேசத்தில் உண்டாயிருக்கும் கடும்போரை ஆயுதமன்னியிலும் சண்டைகப்பல்களின் உதவியல்லாமலும், நமது ஒற்றுமையே கோட்டை மதல்களாய் கொண்டு ஜயிக்க எத்தனம் செய்து இருக்கிறோம். தர்மபுத்ரரைபோலவே நாமும் நமது சகோதரர்களான இந்தியரின் சுகமே சுகமென்று கருதி ஒற்றுமையுடன் பாடுபட வேண்டுமென்பதே.

சுதேசியமானது!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

காஞ்சீபுரம் கருடசேர்வை

விளம்பரங்கள்.

நாளது வைகாசிமீ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். ஷை காலத்தில் துண்டு பிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வீடுவீடாகவும் முக்கிய இடங்களிலும், விநியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.

MADRAS ADVERTISINGS
(சென்னை விளம்பரங்கள்).
10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்

அளவு 27 × 17" மேற்படாத
பிரகடனங்கள்
ஜட்காவண்டி
மேற்கூரையில் ஒட்டுவதற்கு
நூற்றுக்கு
தினத்திற்கு ரூ. 5-0-0
வாரத்திற்கு ரூ. 21-0-0

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.